# மு/மல்லாவி மத்திய கல்லூரி

## முதலாம் தவணைப் பரீட்சை

**தரம் : 09** **கத்தோலிக்க திருமறை** **நேரம் - 2.00 மணி**

**2025**

**பகுதி - I**

**மிகச் சரியான விடையின் கீழ்க் கோடிடுக.**

01. பழைய ஏற்பாட்டு நூல்களின் எண்ணிகை.
    1. 45 2. 27 3. 46 4. 72

02. திருவிவிலியத்தில் செபப்புத்தகம் என அறிமுகப்படுத்தப்படுவது
    1. ஞானநூல் 2. திருப்பாடல்கள்
    3. வரலாற்று நூல்கள் 4. வெளிப்பாட்டு இலக்கியம்

03. புதிய ஏற்பாட்டு நூல்களின் வகைகள்
    1. 03 2. 02 3. 04 4. 08

04. புதிய ஏற்பாட்டின் இறுதி நூல்
    1. யோவான் நற்செய்தி 2. தனிப்பாடல்
    3. திருமுகங்கள் 4. திருவெளிப்பாட்டு இலக்கியம்

05. திருப்பாடல்கள் எத்தனை பகுதிகளாக பிரிக்கப்பட்டுள்து
    1. 05 2. 03 3. 04 4. 02

06. நீதிமான்களாக வாழ மக்களை நல்வழிப்படுத்தும் பாடல்கள்
    1. நன்றிப்பாடல்கள் 2. ஞானப்பாடல்கள்
    3. இறைபுகழ்ச்சி 4. புலம்பல்

07. ஒத்தமை நற்செய்தி நூல்கள்
    1. நான்கு 2. மூன்று 3. நான்கு 4. ஐந்து

08. மாற்கு நற்செய்தியின் வேறு பெயர்
    1. இறையாட்சி நற்செய்தி 2. பாடுகளின் நற்செய்தி
    3. ஏழைகளின் நற்செய்தி 4. பெண்களின் நற்செய்தி

09. இயேசு புதிய மோசே என்பதை எடுத்துக்காட்டுபவர்
    1. மாற்கு 2. லூக்கா 3. மத்தேயு 4. யோவான்

10. ஆன்மீக நற்செய்தி என அழைக்கப்படும் நற்செய்தி
    1. லூக்கா 2. யோவான் 3. மத்தேயு 4. மாற்கு

11. “அவள் வித்து உன் தலையைக் காயப்படுத்தும்” என்ற வசனத்தில் அவள் வித்து என்று குறிப்பிடப்படுவது
    1. மோசே   2. இயேசு   3. இறைவன்   4. மரியா

12. இறைவன் ஆதிப்பெற்றோரை எவ்வாறு தண்டித்தார்
    1. வெறுப்புடன்  2. கோபத்தோடு   3. அன்பினால்   4. நம்பிகையால்

13. “நானே” என்ற சொற்பதத்தைப் பயன்படுத்தும் நற்செய்தியாளர்
    1. மாற்கு   2. யோவான்   3. மத்தேயு   4. லூக்கா

14. ஆதிப் பெற்றோரின் புதல்வர்கள்
    1. ஆபோல்   2. காயின்   3. ஈசாக்   4. காயின், ஆபேல்

15. காயினைக் கொல்கின்ற எவனும் .................. முறை பழிவாங்கப்படுவான்
    1. பத்து   2. ஏழு   3. எழுபது   4. நூறு

(15x2 = 30 புள்ளிகள்)

**<u>அ பகுதியிலுள்ளவற்றிற்கு ஆ பகுதியிலுள்ள பொருத்தமானவற்றுடன் தொடர்புபடுத்துக.</u>**

| அ | ஆ |
|---|---|
| 16. ஆன்மீக வாழ்வு ஊட்டம் பெறுவது | மத்தேயு நற்செய்தி |
| 17. இயேசுவே இறைமகன் | நற்கருணை |
| 18. இறையாட்சி நற்செய்தி | யோவான் நற்செய்தி |
| 19. பழைய ஏற்பாட்டு நூல்கள் | எருசலேம் |
| 20. சீயோன் | ஐந்து |

(5x2 = 10 புள்ளிகள்)

## பகுதி - II

**<u>விரும்பிய நான்கு வினாக்களுக்கும் விடை தருக.</u>**

01. 1. திருப்பாடல் எத்தனை உள்ளன?
    2. திருப்பாடல்களின் வகைகள் எத்தனை?
    3. நீர் விரும்பிய பாடல் ஒன்றை தெரிவு செய்து அவை பயன்படும் சந்தர்ப்பத்தை எழுதுக.

(3x5 = 15 புள்ளிகள்)

02. 1. ஒத்தமை நற்செய்தியாளர்களை குறிப்பிடுக.
    2. தூய மத்தேயு நற்செய்தியின் வேறு பெயர்கள் 02 தருக
    3. தூய மாற்கு நற்செய்தியின் நோக்கத்தை குறிப்பிட்டு, அதனுடாக நீர் பெற்றுக் கொள்ளும் படிப்பினைகளைக் குறிப்பிடுக.

(3x5 = 15 புள்ளிகள்)

03. 1. திருவிவிலியத்தின் இரு பிரிவுகளையும் குறிப்பிடுக.
    2. பழைய ஏற்பாட்டு நூல்களின் வகைகள் எத்தனை? அவை எவை?
    3. திருவிவிலியத்தை வாசிப்பதால் நீர் பெற்றுக் கொள்ளும் படிப்பினைகளை குறிப்பிடுக.

(3x5 = 15 புள்ளிகள்)

04. 1. யோவான் நற்செய்தியாளரின் நோக்கம் யாது?
    2. இயேசுக் கிறிஸ்துவின் இறைத்தன்மையை வெளிப்படுத்தும் என்ற சொற்பதங்கள் 7 "நானே" ஐ குறிப்பிடுக.
    3. நல்ல ஆயனின் பிள்ளையாக வாழ எவ்வாறு முற்படுவீர்

(3x5 = 15 புள்ளிகள்)

05. 1. இறைவன் ஆதிப்பெற்றோருக்கு வழங்கிய கட்டளை யாது?
    2. பாவத்தின் விளைவாக ஏவால், பாம்பு ஆகியோருக்கு கிடைத்த தண்டனைகள் எவை?
    3. உமக்கு ஏற்படும் சோதனைகளின் போது அவற்றை வெற்றி கொள்ள மேற்கொள்ளும் நடவடிக்கைகளை எழுதுக.

(3x5 = 15 புள்ளிகள்)

06. விரும்பிய 03 பற்றி சிறுகுறிப்பு எழுதுக.
    1. யோவான் நற்செய்தி
    2. திருவிவிலியம்
    3. பாவத்தின் விளைவு
    4. நல்ல ஆயன்

(15 புள்ளிகள்)